


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

மரம் 3 ஜனவரி 2003 கனி 2

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## கிறிஸ்துவின் வசன மாத இதழின் ஒன்பதாவது மாவட்ட வாசகர் கருத்தரங்கம்

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள். இக்கருத்தரங்கத்திற்கு சேலம் மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம்** :
- ❑ 1992 முதல் 2002 வரை வெளி வந்த இதழைக் குறித்து ஓர் ஆய்வு
- ❑ இந்த ஒன்பதாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை
- ❑ எதிர் காலத்தில் நமது இதழில் இலக்கு

நாள் : **ஜனவரி 25-ம் தேதி சனிக்கிழமை, மாலை 4.00 மணி**

இடம் : **கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்,**
பரி. அந்தோணி மெட்ரிக்குலேசன் பள்ளி,
நாராயண பிள்ளை தெரு, பெரமனூர் (நால்ரோடு ஸ்டாப்), சேலம் – 9.

மேலும் விபரமறிய
**The Word of Christ,**
✆ (04543) 263278

*கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர்*
**சகோ. டேவிட்**
✆ 0427 - 2319296

*வாருங்கள்! பங்கு பெறுங்கள்!! அறிந்து கொள்ளுங்கள்!!!*

## பொது அறிவுக் களஞ்சியம்

### இந்திய வங்கிகள்

*முதன் முதலில் 1934–ம் ஆண்டுதான் நம்நாட்டில் வங்கிகள் வேலைசெய்யும் முறை ஒழுங்குபடுத்தப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கி 1935–ம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த மத்திய வங்கியின் முக்கிய வேலைகள் மற்ற வர்த்தக வங்கிகளின் முக்கிய வேலைகள், நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது, சீராக்குவது. அன்னியச் செலவாணியை ஒழுங்கு படுத்திக் காப்பது, விவசாயத்திற்குத் தேவையான கடனுதவி அளிக்க ஏற்பாடு செய்தல் முதலியன.*

## வேத அறிவுப் போட்டி எண் 28 ன் விடைகள்

1. விசுவாசத்தின் - ரோ. 3 : 30
2. அப்பொல்லோ - அப். 18 : 28
3. செம்மையான இருதயத்தாருக்காக - சங். 97 : 11
4. மோசே - எண். 16 : 15
5. தன் மனைவிக்கு - 1 கொ 7 : 33
6. கையால் - கொலோ. 2:11
7. மேவிபோசேத் - 2 சாமு. 19 : 24
8. தொபியா - நெகே. 4 : 3
9. யாக்கோபின் குமாரர் - ஆதி. 34 : 14
10. அன்பு கூருகிறோம் - 1யோ. 4 : 19

FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 3 ஜனவரி 2003 கனி 2

# நிலைத்திரு Standfast

ஆசிரியருரை



இப்புத்தாண்டில் இச்செய்தியின் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷ ஊழியத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது "நீ கற்று நிச்சயத்துக் கொண்டவைகளில் நிலைத்திரு" (2தீமோ 3:14) என்று எழுதுகிறார். தீமோத்தேயு எதைக் கற்றுக்கொண்டு எதில் நிலைத்திருந்தான். இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினாலே பரிசுத்த வேதாகமத்தை சிறுவயது முதல் கற்று ஆதி கிறிஸ்தவர்களைப் போல அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்து, பவுலினிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர் களிடத்தில் ஒப்புவித்தான். இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்களாகிய நாமும்கூட முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையாரைப்போல உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். தவறான கொள்கைகளையும், மாய்மாலமான காரியங்களையும் கற்றுக்கொண்டு அவைகளில் நிலைத் திருப்பதால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. இன்றைக்கு அநேகர் மேற்கண்ட வசனத்தை சுட்டிக்காட்டி தாங்கள் கற்றுக்கொண்ட தவறான உபதேசத்திலே நிலைத் திருக்கிறார்கள்.

"இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களைநோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா. 8:31,32). அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தால் மட்டுமே அவருக்கு சீஷராக முடியும். அவருடைய உபதேசத்தில் நிலைத்திராமலும், அவருடைய மாதிரியின்படி நடவாமலும், ஒரு கிறிஸ்தவனாக இருப்பது கூடாதகாரியம். கிறிஸ்துவினுடைய உபதேசத்தை நாம் புதிய ஏற்பாட்டில்

படிக்கின்றோம். "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார். எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" (யோவா. 15:7-8) அவருடைய வார்த்தைகள் நம்மில் நிலைத்திருக்கும்போது நம்முடைய ஜெபம் கேட்கப்படுகிறது. பிதாவாகிய தேவன் மகிமைப்படுகிறார் நாமும் கிறிஸ்துவுக்கு சீஷர்களாகிறோம்.

ஒரு வாலிபன் இயேசுவை நோக்கி : நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் எவைகளை என்று கேட்டான். அதற்கு அவர் கொலை செய்யாதிருப்பாயாக. விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, போன்ற கட்டளைகளை சொன்னார். அந்த வாலிபன் இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு அவர் : நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக்கொடு. அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். இன்று அநேகர் கிறிஸ்துவில் நிலைத்திராமற்போவதற்கு அவருடைய உபதேசத்தை ஏற்றுக் கொள்ளாமையே காரணம், தங்களுடைய எண்ணத்தையும், விருப்பத்தையும் செயலாற்ற நினைக்கும்பொழுது அவருடைய உபதேசம் அதைக் கண்டிக்கின்றது. அதை பொருக்க மனதில்லாமல் "பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை" (சங். 1:5) என்ற வசனத்தின்படி பின் வாங்கிபோகின்றனர். மேற்கண்ட வாலிபனும் சிறுவயது முதல் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தும் இயேசு சொன்ன உபதேசத்தை ஏற்றுக்கொள்ள மனதில்லாமலும் மிகுந்த ஆஸ்தியை இழக்க விரும்பாமலும் துக்கத்தோடே சென்றுவிட்டான். "கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள்" (சங். 125:1).

ஆதி கிறிஸ்தவர்கள் இவ்விதமாய் நிலைத்திருந்தார்கள். "அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அனுதினமும் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்" (அப். 2:46) இப்படிப்பட்ட அந்நியோந்நியத்தில் இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் நிலைத்திருந்து அவருடைய ராஜ்யம் பரவ நாம் பாடுபட வேண்டும். தாவீது ராஜா கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொண்டிருந்தார். அவர் சங். 23:6ல் "என் ஜீவனுள்ளநாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்" என்கிறார். இவ்வசனத்தில் தாவீதின் தீர்மானம் வெளிப்படுகிறது. அவர் ஒரு அரசனாக இருந்தும் தன்னுடைய வாழ்வின் முழுநேரத்தையும் அரண்மனையிலே செலவிடாமல் தேவ சமுகத்தில் இருப்பதையே தெரிந்து கொண்டார். அவர் எழுதின சங்கீதமாகிய பாடல்களையே நாம் அதிகமாக பாடி

தேவனை ஆராதித்து வருகின்றோம். சிலர் சபைக்குச் செல்ல நேரமில்லை, ஜெபிக்கக்கூட நேரமில்லை என்பார்கள் இது எதைக்காட்டுகிறது அவர்கள் தேவ சமுகத்தில் நிலைத்திராததையே காட்டுகிறது. தாவீதைப்போல ஆசீர்வதிக்கப்பட விரும்புகிற நாம் அவரைப் போல கர்த்தருடைய சபையிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பதையே தெரிந்து கொள்ள வேண்டாமா! "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான். நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்" (யோவா 6:56) அவருடைய மரணத்தையும் உயிர்த் தெழுதலையும் நினைவு கூராமலும் அவைகளில் பங்குகொள்ளாமலும் வீட்டிலே இருந்துகொண்டு நானும் கிறிஸ்தவன் என்று சொன்னால் கிறிஸ்தவர்களாக ஆகிவிடமுடியுமா? வாரத்தின் முதல் நாளிலே கிறிஸ்துவானவர் என்ன செய்தார்? எங்கு இருந்தார்? அவரால் விலைக்கு வாங்கப்பட்ட உங்கள் சரீரத்தினாலும் ஆவியினாலும் நீங்கள் தேவனை மகிமைப்படுத்தவும் அவருடைய மரணத்தை நினைவுகூரவும் சபையாக கூடிவரவேண்டியது எவ்வளவு அவசியமான ஒன்று.

ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனென்று வாசிக்கின்றோம். நாமும் ஆபிரகாமின் குமாரர்களும் குமாரத்திகளுமாயிருப்பதற்கு விசுவாசத்தில் வல்லவர்களாக மாறவேண்டாமா? காணாததை நம்புவதே விசுவாசம். "விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்" (எபே. 3:17-19) என்று பவுல் எபேசு சபைக்கு எழுதுகிறார். ஒவ்வொருவரும் அன்பிலேவேரூன்றி நிலைபெற வேண்டும். அன்பு இல்லாதவன் தேவனை அறியான் தேவன் அன்பாகவே இருக்கிறார். அவருடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் இன்னதென்பதை ருசித்துப்பார்க்க வேண்டியவர்களா யிருக்கிறோம். தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். ஆனால் அன்பு ஒருக்காலும் ஒழியாது. "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது" (1கொரி. 13:13) அன்பிற்கு ஈடுஇணை ஏதும் இல்லை. அன்பிலே நிலைத்திருந்தால் அநேகரை ஆதாயம் செய்யலாம்.

நம்முடைய சுயபக்தியினாலோ, அல்லது சுயபெலத்தினாலோ நாம் கிறிஸ்தவத்தில் நிலைநிற்க முடியாது. விசுவாசத்தினாலே நிலைத்திருக்க முடியும். "விசுவாசத்தினாலே வராதயாவும் பாவமே" (ரோ. 14:23) விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாய் இருப்பது கூடாத காரியம். கொரிந்து சபைக்கு பவுல் எழுதும்போது "விழித்திருங்கள் விசுவாசத்திலே நிலைத்திருங்கள். புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்" (1கொ.16:13) என்று எழுதுகிறார். விசுவாசத்திலே நிலைத்திருந்த நம் முற்பிதாக்களின் பட்டியலை எபிரேயர் 11ம் அதிகாரத்தில் படிக்கின்றோம். இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம்

பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். நாமோ அப்படி இல்லாதபடி அவைகளை உற்றுநோக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. "அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான்" (யாக். 1:22-24). அநேகர் வசனத்தை கேட்கிறார்கள். ஆனால் அதன்படி செய்ய தங்களை அர்ப்பணிக்கிறதில்லை இப்படி செய்வதால் கிறிஸ்துவை பிரதிபலிக்க முடியாது, சுபாவமுகமே வெளிப்படும்.

பவுல் சொல்வதைக் கவனித்துப் பாருங்கள்: "கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" (கலா. 6:17) இவ்விதமாக நாம் கிறிஸ்துவை தரித்துக் கொண்டால் சூரியஒளியைப் பெற்று பிரகாசிக்கும் சந்திரனைப்போல விளங்குவோம். அவரைத் தரித்துக்கொள்வது சுலபமான காரியமல்ல" சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானா யிருப்பான்" (யாக். 1:25). பாவத்துக்கு அடிமைகளாயிருந்த நம்மை, ஆண்டவர் அவருடைய இரத்தத்தினாலே மீட்டு இரட்சித்தார். ஆனபடியினாலே நாம் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்பாடமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருந்து, இந்த சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுநோக்கி, அவைகளை பெரோயா பட்டணத்தார்களைப் போல ஆராய்ந்து பார்த்து, அதிலே நிலைத்திருக்கவும் அதற்கேற்ற கிரியை நடப்பிக்கவும் நம்மை ஆயத்தப்படுத்த வேண்டும். அப்பொழுது பாக்கியவான்களாய் இருப்போம்.

அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொண்டு கற்றுக்கொள்வதிலும், உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம்பிட்குதலிலும், விசுவாசத்திலும், அன்பிலும் நிலைத்திருப்போம். **"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்க மாட்டீர்கள்"** (யோவா. 15:4). நாம் அவரில் நிலைத்திருந்து அவர் (அதாவது அவருடைய வார்த்தை) நம்மில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க முடியாது. திராட்சை செடியில் கொடியானது சேர்ந்து இருப்பதுபோல நாம் அவரோடு சேர்ந்து அவரால் உண்டாக்கப்பட்ட கிளையாகவும் (சபையில் நிலைத்து) இருந்து கொண்டு கனிகொடுத்தால் நிலைத்திருப்போம். மற்றபடி நம்முடைய விசுவாசமும் பிரயாசமும் வீணாய்ப்போகும். கர்த்தருக்குள் நிலைத்திருக்கிற பாக்கியத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.

# கிறிஸ்துவுக்குள் அடி எடுத்துவைத்தல்

# Steps into Christ

J.C. Choate

கிறிஸ்துவுக்குள் சகல ஆசீர்வாதங்களும் மற்றும் இரட்சிப்புங்கூட காணப்படுகிறது என வேத வாசனங்கள் நமக்குப் போதிக்கிறது. அவைகளில் சிலைவற்றை கவனியுங்கள் : "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2கொரி. 5:17). "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்" (எபேசி. 1:3). மேலும் கடைசியாக, "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று" (எபேசி. 1:10).

இந்த எல்லா ஆசீர்வாதங்களும் கிறிஸ்துக்குள்ளிருக்கிறபடியினால், பின்பு "ஒருவன் கிறிஸ்துவுக்குள் எவ்வாறு பிரவேசிக்கிறான்?" என்ற, அடுத்த கேள்வி எழுவது இயற்கையாகும். இதற்குப் பதிலளிக்கும்படி நாம் மீண்டும் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்ப வேண்டும். நாம் இவ்வசனங்களை வாசிக்கையில் ஒருவன் மேற்கொள்ள வேண்டிய பலமுயற்சிகளை நாம் கண்டு கொள்ளுவோம். ஒவ்வொரு முயற்சியும் மற்றவைகளைப்போலவே மிக முக்கியமானதாகும். இவையெல்லாம் இருந்தாலும் ஒரு சாதாரண காரியம் தனியொருவனுக்கு கிறிஸ்துவுக்கு வெளியிலிருந்த இடத்திலிருந்து கிறிஸ்துவுக்குள்ளான இடத்திற்கு வரக்கூடிய கடைசியானதும் முடிவானதுமான அடிஎடுத்துவைக்குதலைக் கொண்டு வருகிறது. உதாரணமாக, ஒரு கட்டடத்திற்குள் நுழைந்து அவ்விடத்திற்கு செல்ல ஒருவன் பல அடிகள் எடுக்க வேண்டியது அவசியம் அவன் எடுத்து வைக்கும் கடைசி அடி அவனை முடிவில் அந்த கட்டடத்திற்குள் கொண்டு செல்லும். இவை புரிந்துகொள்ளுவதற்கு கடினமானவை அல்ல, அப்படித்தானே? ஆனால் அந்த அடிகள் எவைகளென நாம் பார்ப்போம்.

**1.** ஒருவன் எடுத்து வைக்கவேண்டிய முதல்அடி கிறிஸ்துவைப்பற்றி கேள்விப்பட வேண்டும் அல்லது தேவனுடைய வார்த்தையைப் பற்றி கேள்விப்பட வேண்டும் என்பதாகும். இயேசு உயர்ந்த மலையின் மேல் போய் மறுரூபமான பொழுது பிதாவானவர்," இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவி கொடுங்கள்" (மத். 17:5) என்றார். பவுல், "ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" (ரோம. 10:17) என்று பிரசங்கித்தார். இவ்விதமாகவே கிறிஸ்து அப்போஸ்தலர்களை நோக்கி உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுங்கள் எனக் கட்டளையிட்டார் (மாற்16:15,16). கர்த்தரைக் குறித்து கேள்விப்படாமல் ஒருவன் கர்த்தரிடத்தில் விசுவாசம் கொள்ள முடியாது, விசுவாசமில்லாமல் ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியவும் முடியாது.

இப்போது முதல் அடி எடுத்துவைத்தல் என்பது மிகமுக்கியம், முதல் அடி இல்லாமல் ஒருவன் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கமுடியாது. இத்தோடு நிறுத்தி விடுவது சோகமான ஒன்றாயிருக்கும்

**2.** ஒருவன் எடுத்து வைக்க வேண்டிய இரண்டாவது அடி தேவனிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும். மேலும் இயேசு கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும் என்பதாகும். நாம், "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி. 11:6) என வாசிக்கிறோம். கிறிஸ்து தாமே, "தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (யோவா. 14:1) என்றார். மறுபடியும் அவர், "ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்." (யோவா. 8:24).

இரட்சிப்பிற்கு விசுவாசம் அவசியம் எனக்கூற தேவையில்லை. இருப்பினும், விசுவாசம் மாத்திரம் இரட்சிக்காது மேலும் விசுவாசம் மாத்திரம் ஒருவனை கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கப் பண்ணாது. ஆனால் இது இரட்சிப்பிற்கு நேராக வழிநடத்தக்கூடிய ஒரு அடியாகும். பவுலினுடைய குறிப்பை கவனியுங்கள்; "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்" (ரோம. 10:10). எனவே நம்பிக்கை அல்லது விசுவாசம் இரட்சிப்பிற்கு நேராக (வழிநடத்தும்) கொண்டு செல்லும் ஆனால் இரட்சிப்பிற்குள் கொண்டு செல்லாது.

**3.** ஒருவன் எடுத்துவைக்க வேண்டிய மூன்றாவது அடி தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்ப வேண்டும் என்பதாகும். அனைவரும் தேவனுடைய பார்வையில் பாவிகள் மேலும் பாவத்தின் சம்பளம் மரணம் (ரோம. 3:23; ரோம. 6:23). ஆகவே இதற்கு பரிகாரம் என்ன? மனந்திரும்புதல். மனந்திரும்புதல் என்றால் என்ன? இது இருதயத்தில் ஏற்படும் ஒரு மாற்றம், திரும்பி வேறுவழியில் செல்லுதல் ஒருவனுடைய ஜீவியத்திலுள்ள சகல பாவங்களையும் விட்டுவிடுதல், இவ்வாறாக ஒரு பரிசுத்த ஜீவியம் ஜீவிக்க முயற்சித்தலாகும். கிறிஸ்துவானவர் மனிதன் தன்னுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படமுடியாது என்பதை அறிவார், எனவே அவர், "நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்" (லூக். 13:3) என்றார். பிறகு பவுல், "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" (அப். 17:30) என பிரசங்கித்தான். பேதுருவும், "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (அப். 2:38) என பிரசங்கம் பண்ணினான்.

ஒருவன் தன் முழு இருதயத்தோடு கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டு, தன் பாவங்களைவிட்டு மனந்திரும்பினபோதிலும் தன்னை இரட்சித்துக்கொள்ள இது போதுமானதாக இல்லை. இன்னும் சில அடிகள் எடுத்து வைக்க வேண்டியுள்ளது.

**4.** ஒருவன் எடுத்து வைக்க வேண்டிய நான்காவது அடி இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என வாயினால் அறிக்கைபண்ண வேண்டும் என்பதாகும். கிறிஸ்து, "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" (மத். 10:32) என்றார். இதையே அப்போஸ்தலர் 8:37ல் மந்திரி செய்தான். இரட்சிப்படைய அறிக்கைப்பண்ண வேண்டும் என்பதுபற்றி ஏற்கனவே நாம் அறிந்திருக்கிறோம் (ரோம. 10:10). அப்படியென்றால் செய்யாமல் விட்டுவிட்டவை எவை? ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளாகவும் இரட்சிப்பிற்குள்ளாகவும் கொண்டு செல்லக்கூடிய ஒரு கடைசி அடி உண்டு. மேற்குறிப்பிட்டுள்ள மற்ற அடிகள் மிகவும் அவசியமானவை, ஆனால் இந்த கடைசி அடி ஒருவனை முடிவாக கிறிஸ்துவுக்குள் கொண்டு செல்லக்கூடியதாகும். இப்பொழுது நாம் அதைக் காண்போமாக.

**5.** ஒருவன் எடுத்து வைக்க வேண்டிய ஐந்தாவது அடி பாவங்கள் மன்னிக்கப்படும்படிக்கு தண்ணீர் முழுக்கினால் கிறிஸ்துவோடுகூட அடக்கம்பண்ணப்பட்டு இவ்வாறாக அவன் கிறிஸ்துவுக்குள்ளும் அவருடைய சபைக்குள்ளும் பிரவேசிக்க வேண்டும் என்பதாகும். பின்வரும் வசனங்களில் ஞானஸ்தானத்தின் முக்கியத்துவம் முன்வைக்கப்பட்டுள்ளது. மாற்கு. 16:16; அப். 2:38; அப். 22:16; 1பேதுரு 3:21, இன்னும் பல. அதன்பின் பவுல், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?" (ரோம. 6:3) என எழுதினான். மறுபடியும் அவன், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர் களே" (கலா. 3:26,27) என எழுதினான்.

எனவே இவற்றை பற்றிக்கொள்ளுங்கள். ஒரு வழி, ஒரே ஒரு வழி மட்டுமே கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்க உண்டு. மேலும் அவை ஞானஸ்நானம் பெறுவதன் மூலமே முடியும். இது ஞானஸ்நானம் மட்டுமே இரட்சிக்கிறது என்று சொல்லுவதற்கல்ல - அது வெகுதூரம். ஏற்கனவே அறிவுறுத்தினபடி, ஒருவனை இந்த கடைசி அடியை எடுத்து வைக்க தகுதிப்படுத்தும்படிக்கு மற்ற அடிகள் ஞானஸ்நானத்திற்கு முன்பாக இருக்க வேண்டியவைகள் ஆகும். ஆனால் ஒருவன் எல்லா அடிகளையும் எடுத்து வைக்கும் வரைக்கும் இரட்சிக்கப்பட முடியாது என்பது தெரிந்த ஒன்றாகும். இல்லையென்றால் ஒருவன் கர்த்தருடைய மன்னிப்பிற்கான நிபந்தனைகளுக்கு இணங்காமல் இரட்சிக்கப்படுவானா? அவ்வாறு இரட்சிக்கப்பட முடியாது. நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? இந்தவிதமான அடிகளை நீங்கள் எடுத்து வைக்காதிருந்தால் நீங்கள் கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கவில்லை. நீங்கள் இந்த அடிகளை எடுத்து வைக்காதிருந்தால், இவைகளைச் செய்யும்படிக்கு துரிதப்படுத்தப்படுகிறீர்கள்.

# நீர் அழைப்பீர் நான் பதிலளிப்பேன்

## THOU SHALT CALL AND I WILL ANSWER

*Betty Burton Choate*

ஓ, என் பிதாவே, காலைப்பொழுதினிலே
என் நாட்களின் வைகறையில்,
நீர் அழைப்பீர் நான் பதிலளிப்பேன்
கணீரென்ற துதியின் பாட்டினால்.

குழந்தைப் பருவத்தின் மகிழ்ச்சி கனவுகளில்,
வளரும் சந்தோஷத்தின் ஆண்டுகளில்,
நீர் அழைப்பீர் நான் பதிலளிப்பேன்,
உம்முடைய சேவையில் என்னுடைய கரங்கள் பணியாற்றுகிறது.

எரிக்கின்ற நடுப்பகலின்
ஊடே
உஷ்ணத்தில் நான் தள்ளாடும் வேளையில்,
நீர் அழைப்பீர், ஓ அன்பின் பிதாவே,
என் நாவு உமக்கு பதிலளிக்கும்.

பாரத்தினால் மிகச் சோர்ந்த
போதிலும்
புழுக்கம் மிகுந்த பிற்பகல் வேளையில்
நீர் அழைப்பீர் நான் பதிலளிப்பேன்
என் இளைப்பாறுதல் வருகிறது நிச்சயமாய் சீக்கிரமாய் என

ஓ, என் பிதாவே, சூரிய அஸ்தமனத்தில்,
வெதுவெதுப்பு மறையும் பொழுது
ஒளியினால்,
நீர் அழைப்பீர் நான் பதிலளிப்பேன்,
பயமின்றி இரவை சந்திக்க

நீர் அழைப்பீர் என்னை
இருளினூடே
என்னுடைய பணி கடைசியாக நிறைவேறுகைகளில்;
நான் கேட்பேன் தேவதூதரின் செட்டைகளின் சப்தத்தை
உம்மிடமிருந்து அனுப்பப்பட்டு என்னைக் கொண்டு செல்ல
வீட்டிற்கு.

<u>பல்லவி:</u>

நீர் என்னை அழைப்பீர், ஓ என் பிதாவே,
முடிவில்லா பணிகள் உண்டு செய்வதற்கு;
எடுத்துக்கொள்ளும் என் கரங்களை, என் கால்களை
பயன்படுத்தும் அவைகளை,
நான் வாழட்டும் மரிக்கட்டும் உமக்காக!

– தமிழில் J. குளோரி அர்ஜுனன்

# இயேசு ஏன் உலகிற்கு அனுப்பப்பட்டார்?

# WHY WAS JESUS SENT TO THE WORLD?

– ஏசாயா 61 : 1 – 3

* சுவிசேஷத்தை அறிவிக்க
* இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயம் கட்டுதலைக் கூற
* சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையைக் கூற
* கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலைக் கூற
* கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைக் கூற
* நம்முடைய தேவன் நீதியைச் சரிகட்டும் நாளைக்கூற
* துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்ய
* துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்த
* துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தை கொடுக்க
* ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்க

**மதத்தை ஸ்தாபிக்க அல்ல**
**ஜீவ மார்க்கத்தைக் காண்பிக்கவே!**

## வேத அறிவுப்போட்டி எண் 28 ல் வெற்றிபெற்றவர்கள்

1. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
2. S. எஸ்தர்மெர்ஸி - வத்தலக்குண்டு
3. V. கோவலன் - மதுரை
4. A. மேரியம்மாள் - மதுரை
5. Mrs. ஜெயந்திநோயல் - சேலம்
6. R. ஸ்வாதிரவி - சேலம்
7. C. அன்புராஜ் - காங்கயம்
8. M. சத்தியவாசகன் - சேலம்
9. S. முத்து - சென்னை
10. Mrs. பேபிராஜா - மதுரை
11. S. லலிதா பிரேமகுமாரி - மதுரை
12. J. நிர்மலாஜான் - மதுரை
13. B. ராஜேஸ் - செட்டிபாளையம்
14. P. டேவிட் - செட்டிபாளையம்
15. D. சமாதானராஜா - செட்டிபாளையம்
16. D. ஸ்டாலின் டுவிங்கில் - செட்டிபாளையம்
17. R. மேகநாதன் - செட்டிபாளையம்
18. C. பிரவீன் - செட்டிபாள்ளயம்
19. P. கந்தசாமி - K. கிரனூர்
20. Mrs. குளோரிஃபல்கர் - சென்னை
21. S. சதீஸ்குமார் - அரக்கோணம்
22. L. ஐசக் - செட்டிபாளையம்
23. D. ரூபிஅந்தோனி - சேலம்
24. R. சண்முகம் - வேலம்பாளையம்
25. N. ஜேம்ஸ் - செட்டிபாளையம்
26. A. சேவியர் - மதுரை
27. A. தங்கமுத்து - பொங்களூர்
28. R. பெரியசாமி - சேளூர்
29. P. சாந்திபுஷ்பராஜ் - மேலகோடன்குளம்
30. R. பிளசன் - செட்டிபாளயம்
31. K. சாந்தி - வாடிப்பட்டி
32. I. மேரிஎலிசபெத் - சங்ககிரி
33. D. சுகந்தி - சங்ககிரி
34. N. டேனியல் தமிழ்வாணன் - மேல்விசாரம்
35. Mrs. சவுதாமினி - சேலம்
36. P. ஏசையன்ராஜ் - கோபி
37. L. மனாசேமண்ணு - சித்தூர் (A.P.)
38. S. தண்டபாணி - சிலுவத்தூர்

| ஒருவரிப்பாடம் 25ன் விடைகள் | 1. A, 2. B |
|---|---|

**எப்போதும் மட்கிப்போகாமல் கிடக்கும் பாலித்தீன் பைகள் மண்வளத்துக்கு எதிரி!**

## ஒரு வழி




## கிறிஸ்துவின் சபையின் தொழுகை மற்றும் ஆராதனை

## WORSHIP AND SERVICE OF CHURCH OF CHRIST

### பாடம் 26

இயேசு யோவான் 4:24ல் மிக முக்கியமான ஒரு காரியத்தை வலியுறுத்தினார். **"உண்மையாய்த் தொழுதுகொள்கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும்** தொழுதுகொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது; **தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப் பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்."** நாம் தேவனை எப்படித்தொழுது கொள்கிறோம் என்பது மிக முக்கியமானதாகும். **தேவன் நம்முடைய சிருஷ்டிகர் அவர் தாம் இவ்விதமாய் தொழுதுகொள்ளப்பட வேண்டுமென அறிவுறுத்துகிறவராயிருக்கிறார்.** ஆனபடியால் பிதாவானவரை இவ்விதமாய் தொழுதுகொள்ள வேண்டுமென்பது நம்முடைய தெரிந்துகொள்ளுதலாகாது. அவர் நம்முடைய சிருஷ்டிகராயிருப்பதினால் தெரிந்து கொள்ளுதலானது அவருடையதாகும்.



பல சமயத்தவர்கள் இன்று தேவனை அவர்களுடைய சுயகற்பனைகளுக்கேற்ப தொழுது கொள்ளுகின்றனர். ஆனால் நாம் தேவனை மனுஷனுடைய கோட்பாடுகளின்படியும் கற்பனைகளின்படியும் தொழுது கொள்ளுவோமேயென்றால், நாம் தேவனை வீணிலே தொழுது கொள்ளுகிறோம். இயேசு "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" என்றார் (மாற். 7:7). நாம் தேவனையும் அவருடைய சித்தத்தையும் அறியாமல் அவரை ஆராதிப்போமானால், நாம் அவரை வீணிலே ஆராதிக்கிறவர்களாயிருப்போம். அப்போஸ்தலனாகிய பவுல் இப்படி ஆராதிக்கிறவர்களுக்கு அப்போஸ்தலர் 17ல் இவ்வாறாக எடுத்துரைத்தான். அவன் அவர்களைப் பார்த்து, "நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்" (அப். 17:23) என்றான். அவர்கள் தேவனை உண்மையோடு தொழுதுகொள்ளும் படிக்கு, பவுல் அவர்களுக்கு தேவனுடைய உண்மையை பிரசங்கம்பண்ணினான் (அப். 17:23-31).

அத்தோடு தங்களது சுயசமய பாரம்பரியங்கள், கோட்பாடுகளின்படி, தேவனை ஆராதிக்கிறவர்களும் அங்கே இருக்கின்றனர். இது குறித்து வேதாகமம்,

"இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒழுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும் இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" (கொலோ. 2:23) எனக் கூறுகிறது. ஆம், **நாம் நம்முடைய விருப்பத்தின்படியல்ல** தேவனுடைய விருப்பத்தின்படியே அவரை ஆராதிக்க வேண்டியது மிக முக்கியமானதாகும்.


தேவனை ஆராதிப்பதற்கும் தொழுதுகொள்ளுவதற்கும் இது முக்கியமானது என்கையில், துரதிஷ்டமாக பவுல் பலருடைய ஆராதனையும் தொழுகையும் தேவனால் புறக்கணிக்கப்பட்டதென அவர்களுக்கு எழுதினார். "தேவனைப்பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக் குறித்துச் சாட்சி சொல்லுகிறேன்; **ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல.** எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், **தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்கும் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்"** (ரோம. 10:2,3) என எழுதினான். நாம் தேவநீதியை அவருடைய வார்த்தையின் அறிவுக்கேற்றபடி தேடவேண்டும். வேதாகமத்தை அறியாதிருக்கிறவர்கள் தங்களுடைய சுயக்கட்டளைகள், பாரம்பரியங்களுக்கேற்ப தேவனை ஆராதிக்கத் தேடுகிறார்கள். அவர்கள் இவ்விதமாக தேவனை வீணாக ஆராதிக்கிறார்கள்.

## ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுதல்

இன்று கிறிஸ்தவர்கள் அறிவில்லாமல் அல்லது பழைய ஏற்பாட்டு கட்டளைகளைப் பின்பற்றி தேவனை ஆராதிக்க வேண்டியவர்களாக இருக்கவில்லை என்பது ஒரு மகத்தான செய்தியாகும். தேவனை ஆராதிப்பதில் மிருகபலிகள் இனி தேவையல்ல. இன்று கிறிஸ்தவர்கள் பாவங்களை நிவர்த்தி செய்யக்கூடாததான காளைகள், வெள்ளாடுகள் இவைகளின் இரத்தத்தை காணிக்கையாக செலுத்தும் நிர்ப்பந்தத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கின்றனர் (எபி. 10:1-4). இவர்கள் மனுஷனுடைய சுய இஷ்டமான மற்றும் பாரம்பரியங்களுக்கேற்ப தேவனை அறிவில்லாமல் ஆராதிப்பதிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். இன்று கிறிஸ்தவர்கள் ஆராதனையில் தேவனுடைய ஆவியினால் ஏவப்பட்ட வார்த்தையின் மூலம் அவருடைய வழிநடத்துதலின் அநுக்கிரகத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

**இன்று தேவனை நோக்கிச் செய்யும் கிறிஸ்தவர்களின் ஆராதனையும் தொழுகையும் அநுதினமும்** செய்யக்கூடிய மற்றும் தேவனுடைய சித்தமாகிய வேதாகம வழிநடத்துதலுக்கேற்ற அடிப்படையிலும் இருக்கின்றது. அவருடைய ஆராதனையும் தொழுகையும் கட்டடங்களின் எல்லைக்குட்பட்டோ அல்லது குறிப்பிட்ட இடங்களிலோ செய்யப்படுவதில்லை, ஏனென்றால் தேவன், "கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை..... அவர் தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை" (அப். 17:24,25). தேவனுடைய தொழுகையும் ஆராதனையும் குறிப்பிட்ட நேரம் அல்லது நாளுக்கு உட்பட்டதல்ல. வேதம், " அப்படியிருக்க, சகோதரரே, **நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப்பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க**

வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோம. 12:1) எனக் கூறுகிறது. கிறிஸ்தவன் தன்னுடைய முழு ஜீவியத்தையும் தேவனுக்கு ஜீவபலியாக ஒப்புக்கொடுத்திருக்கிறான். பவுல் தன்னைப் பற்றி, "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா. 2:20) என்றான். கிறிஸ்தவனின் முழுஜீவியமும் தேவனை ஆராதிக்கும்படி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனபடியால் அவன் அனுதினமும் தேவனை ஆராதிக்கிறான்.




அனைத்து கிறிஸ்தவர்களும் தேவனுடைய ஆசாரியர்களாக இருக்கின்றனர். கிறிஸ்தவர்கள் "....ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறார்கள்" (1பேது. 2:5). கிறிஸ்தவர்கள் ஒரு "தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாயும் அவருடைய (தேவனுடைய) சொந்த ஜனமாயுமிருக்கிறர்கள்...." (1பேது. 2:9). ஆசாரியர்களாக, கிறிஸ்தவர்கள் எல்லா நேரங்களிலும் ஊழியஞ் செய்கிறவர்களாயிருக்கிறார்கள். இவர்களுடைய முழுஜீவியமும் தேவனுக்கு ஆராதனை செய்யும்படிக்கு அநுதினமும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் தங்களுடைய தேவனின் அநுதின தொழுகையிலும் ஆராதனையிலும் செய்யவேண்டிய சிலமுக்கிய காரியங்கள் பின்வருவன.

**✳ கிறிஸ்தவர்கள் வாசிப்பதிலும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதிலும் தரித்திருத்தல் :**

ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவனுடைய வார்த்தையை அநுதினமும் பிரசங்கிக்கத் தீர்மானித்தார்கள். **"தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்"** (அப். 5:42). **அவர்கள் "....எங்குந்திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்"** (அப். 8:4). ஏனென்றால் கிறிஸ்தவர்கள் தேவனுடைய கிருபையினால் மீட்கப்பட்டுள்ளனர், இவர்கள் உலகமுழுமைக்கும் மகத்தான செய்தியைக் கொண்டிருக்கின்றனர். உலகிலுள்ள சர்வசிருஷ்டிக்கும் இவர்கள் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டியிருப்பதால், இது இவர்களுடைய வேலையாயிருக்கிறது (மாற். 16:15).

**தற்சோதனை :**

1. ______ தங்களுடைய சுய மதக்கற்பனைகளின்படி தேவனை ஆராதிக்கின்றவர்கள் உண்மையிலே தேவனை ...... ஆராதிக்கின்றார்கள்.
(A) உண்மையாக B) வீணாக (C) அமைதியாக
2. ______ தேவனுடைய வார்த்தையை அறியாதவர்கள் தேவனை ..... ஆராதிக்கின்றார்கள்.
A) அறியாமல் (B) உண்மையாக (C) ஞானமாக
3. ______ கிறிஸ்தவர்கள் தேவனுக்கு ஜீவபலியாக எதை ஒப்புக்கொடுக்க வேண்டும்?
A) உடமைகள் (B) திறமைகள் (C) சரீரங்கள்
4. ______ கிறிஸ்தவர்கள் தங்களுடைய பரிசுத்த தொழுகையையும், ஆராதனையையும் பொறுத்தவரையில் என்னவாகயிருக்கிறார்கள்?
A) ஆசாரியர்கள் (B) பிரசங்கிமார்கள் (C) தீர்க்கதரிசிகள்
5. ______ கிறிஸ்தவர்களின் ஆராதனையின் நேரம் எப்போது?
A) சனி (B) ஞாயிறு (C) தினந்தோறும்

ஆம் / இல்லை : நீங்கள் தவறான முறையில் தேவனை ஆராதித்துக் கொண்டிருக்கிறீர்கள் என வேதாகமத்தில் கண்டு பிடித்தீர்களானால், உங்களுடைய ஆராதனையை நீங்கள் மாற்றிக் கொள்ளுவீர்களா ?

**வேதவாசிப்பு** : மத். 15:1–9; அப். 17:16–30; 2தீமோ. 4:1–3.

**வேதஆராய்ச்சி : ஆராதனை : ஆதி. 22:5; சங். 45:11; 95:6; மத். 2:2 அப். 24:14; வெளி. 4:10; 14:7, 19:4; எபி. 10:24,25. பிரசங்கி : மத். 28:19,20; மாற். 16:15,16; ரோம. 10:8–15; எபே. 3:10,11; 4:11,12; 1தீமோ. 4:13, 2தீமோ. 2:15.**



## தெரிந்து கொள்ளுங்கள்!

### நாயீன்

***K.R.K. ரவி ஆசீர்***

கலிலேயா மாகாணத்தில், தாபோர் மலைக்கு தெற்கே இரண்டு மைல் தூரத்தில், கலிலேயா கடலுக்கு சற்று தென்மேற்கு திசையில் இவ்வூர் அமைந்துள்ளது. இயேசு இந்த ஊரில்தான் மரித்துப்போன ஒரு விதவையின் மகனை உயிரோடெழுப்பினார். (லூக்கா 7:11,18).

# சந்திப்போம் – சிந்திப்போம்

உரையாடல் – 5 **D. எபிநேசர்**

***தாவீது*** : தேவ நீதின்னா என்னன்று கேட்டிருந்தே, இல்லையா யோனத்தான்? இந்த வசனங்களைப் படி. உனக்குத் தானாவே புரியும். ரோம. 4:3, 23, 24.

***யோனத்தான்:*** 'ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது.' 'அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்பது அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும்.

***தாவீது*** : தேவனை விசுவாசிக்கிறதினாலே தேவ நீதியை அடைகிறோம் என்பது விளங்கிருச்சா?

***யோனத்தான்:*** அதுசரி. எல்லோருந்தானே விசுவாசிக்கிறாங்க! விசுவாச மில்லாமையா பைபிளைத் தூக்கிக் கிட்டு சர்ச்சுக்குப் போறாங்க. வேளாங்கண்ணிக்குப்போய் மொட்டையடிக்கிறாங்க. அந்நிய பாஷை பேசி, அற்புத அடையாளங்கள் செய்யற அவங்களுக் கெல்லாங்கூட விசுவாசமே இல்லேங் குறியா?

***தாவீது*** : விசுவாசம் இருக்குது சரி. ஆனா எப்படிப்பட்ட விசுவாசம்? ஒண்ணு தெரியுமா உனக்கு? பிசாசுகள் கூட விசுவாசித்து நடுங்கு கின்றனவாம்! யாக். 2:19 ஆனா பிசாசு, ஏன் தேவனுக்கும் நமக்கும் எதிரியா இருக்கிறான்? ஏன்னா பிசாசின் விசுவாசத்துக்கும் ஆபிரகாமின் விசுவாசத்துக்கும் ஒரு பெருத்த வித்தியாசம் இருக்குது. அது கீழ்ப்படிதல். நான் காட்டும் தேசத்துக்கு போன்னு சொன்ன உடனே ஆபிரகாம் மறுபேச்சுப்பேசாம போனாரு. மகன பலியாக கேட்டப்போ மறுக்காம குடுக்கத்துணிஞ்சாரு! அதுவல்லவா விசுவாசம்! அப்படிப்பட்ட விசுவாசத்தத்தான் தேவன் நம்ம கிட்ட எதிர்பார்க்குறாரு.

***யோனத்தான்:*** ஆண்டவர் கூட தேவனுக்குச் சமமானவரா இருந்தும் அவருக்கு முற்றிலும் கீழ்ப்படிந்தார் இல்லையா?

***தாவீது*** : ஆமா யோனத்தான். ஆண்டவரே அந்த அளவுக்கு கீழ்படிஞ்சிருக்காருன்னா நாம எந்த அளவுக்கு தேவனுக்கும் அவருடைய வார்த்தைக்கும் கீழ்படியணும் இல்லேன்னா நம்ம விசுவாசம் செல்லுபடியாகாதுப்பா.

***யோனத்தான்:*** இப்ப எல்லாமே எனக்கு புரியுது தாவீது. ஆனா ஒரே ஒரு விஷயம் மட்டும் எனக்குப் புரியவே மாட்டேங்குதுப்பா!

***இருவரும்*** : அது என்னான்னு அடுத்த முறை பார்க்கலாமா அன்பர்களே! *Bye... Bye...*

# "கர்த்தாவே நான் உம்முடையவன்"

"கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1 கொரிந்தியர் 6:20)

## நாம் கர்த்தருக்கு கொடுப்போம்

- நம்முடைய **இருயத்தை** : "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும்" (மத்தேயு. 22:37)
- நம்முடைய **கண்களை** : "கண்ணானது சரீரத்தில் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும்" (லூக்கா 11:34)
- நம்முடைய **காதுகளை** : "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (வெளி. 2:7)
- நம்முடைய **கரங்களை** : "உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்" (யாக்கோபு 4:8)
- நம்முடைய **பாதங்களை** "சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சயைக் கால்களிலே கொடுத்தவர்களாவும்" (எபேசியர் 6:15)
- நம்முடைய **நாவை** : "அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறபடியால் பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபேசியர் 4:25)

*- CHARLES BOX*

### ஜெபியுங்கள்



1. இம்மாதம் நடைபெறவிருக்கும் ஒன்பதாவது மாவட்ட வாசகர் கருத்தரங்கிற்காக....
2. இந்த வருடத்தின் பிரயாசங்களை தேவன் ஆசீர்வதிக்கும்படி....
3. இந்தியாவில் சுவிசேஷம் அறிவிக்க தடை ஏற்படாதபடி....

சிறுவர் பகுதி

# மாயவித்தைக்காரர்களின் துணிவு



**வேத பகுதி : அப். 19 : 11 - 20**

**பொ**ல்லாத ஆவிபிடித்தவர்களை பார்த்து இருப்பீங்க. இப்படிப்பட்டவர்களை நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சுகமாக்கி, அவர்களில் இருந்த பொல்லாத ஆவிகளை துரத்தினாரு. அதைப்போல அவருடைய சீஷர்களும் செய்தாங்க. அப்போஸ்தலானகிய பவுலும் இந்தவிதமான பொல்லாத ஆவி பிடித்தவர்களை சுகமாக்கிக்கொண்டு வருவதைப்பார்த்த மந்திரவாதிகளும் பொல்லாத ஆவி பிடித்திருந்தவர்கள் மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தை சொல்லத்துணிந்து: பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம். இவர்களை விட்டுபோங்கள் என்று சொல்ல அந்த பொல்லாத ஆவி என்ன சொன்னது தெரியுமா? இயேசுவையும் அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி, பொல்லாத ஆவிபிடித்த மனிதன் அவர்கள்மேல் பாய்ந்து பலாத்காரம்பண்ணி அவர்களை மேற்கொள்ள அவர்கள் பயந்து அடிச்சுக் கொண்டு, நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாக அந்த வீட்டைவிட்டு ஓடோடிப்போனார்கள்.

பார்த்தீர்களா! பிசாசுகளும் இயேசுவை விசுவாசித்து நடுங்குகின்றன. பிசாசுக்கு தெரியும் இயேசு எப்படிப்பட்டவரென்று. ஆனால் அவருடைய நாமத்தின் மகத்துவங்களை அறியாத தெரியாத மனிதர்கள் அவருடைய நாமத்தை வெகுலேசாக பயன்படுத்த துணிந்தபோது பொல்லாத ஆவிகள் அவர்களை மேற்கொண்டது. ஓடோடிப்போன மாயவித்தைக்காரர்களில் அநேகர் தங்களுடைய மாயவித்தைகள் எல்லாம் இயேசுவின் நாமத்திற்க்கு முன்பாக ஒன்றும் இல்லை என்று அறிந்து மாயவித்தை புத்தகங்களை எல்லாருக்கும் முன்பாக சுட்டெரித்தார்கள். அது ஏறகுறைய ஐம்பது ஆயிரம் வெள்ளிக்காசு பெறுமானமுள்ளது. அதை விற்று இருக்கலாம் என்று நினைக்கிறீர்களா? அதை விற்றாவேறொருவர் ஏமாற்றப்படுவாருல அதனால் தான் எல்லாவற்றையும் சுட்டெரித்துப்போட்டாங்க. அதன் பின்பு அப்பகுதியில் கர்த்தருடைய வசனம் மிக அதிகமாக பரவஆம்பித்தது.

அன்பான தம்பி தங்கைகளே மாயவித்தைகள் செய்கிற மனுஷரைக் கண்டு பயப்படாதீங்க. மாயவித்தைகள் எல்லாம் ஒன்றுமில்லை. இயேசு ஆண்டவருக்கு வானத்திலும் பூமியிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். அவர் உங்களை ரொம்பவும் நேசிக்கிறார். அவருடைய நாமமே உயர்ந்தது. அவருடைய நாமத்தினாலே நாம் ஜெபிக்கிறோம். இல்லையா, அவருடைய நாமத்தினாலே நாமும் நம்முடைய குடும்பத்தாரும் இரட்சிக்கப்படுவோம். சரி அடுத்த மாதம் சந்திப்போம். மறக்காம மனப்பாட வசனத்த படிச்சிட்டு வாங்க.

**மனப்பாட வசனம்**

தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன. (யாக்கோபு 2:19)

# புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கத்தின் மாதிரிச் சட்டம்

P.R. SWAMY



புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவ மார்க்கத்தின் மாதிரிச்சட்டம் என்கிற தலைப்பில் சில காரியங்களை வேத வசனத்தின் துணைகொண்டு ஆராய்வோம். நாம் இவ்வுலகில் காண்பது எல்லாம் கிறிஸ்தவ மார்க்கம் ஆகிவிடாது. உண்மையான கிறிஸ்தவ மார்க்கத்தை அடையாளம் கண்டு கொள்ளத்தக்க அம்சங்களை தேவன் கொடுத்திருக்கிறார். ஆகையினால் தவறான மார்க்கத்தினின்று அதை அடையாளம் கண்டு கொண்டு அதை மாத்திரம் பின்பற்ற முடியும்.

'சபை' என்பது மனிதனுடைய யுக்தியினாலோ, எண்ணத்தினாலோ உண்டானது அல்ல. சபை, தேவனுடைய அநாதி தீர்மானம் என்கிறார் பவுல் (எபே. 3 : 9 - 11). அந்த சபையை அறிந்து கொள்ளத்தக்க தெளிவான அடையாளங்கள், குறிப்பான அம்சங்கள் புதிய ஏற்பாட்டில் உள்ளன. அந்த மாதிரிச்சட்டத்தையே இந்த பாடத்தில் கவனிப்போம். ஒரு அச்சில் ஈயத்தை வார்த்து, அதிலிருந்து எடுக்கப்படும் ஒவ்வொரு உருவமும் எப்படி ஒரே மாதிரியாக இருக்குமோ, அப்படியே தேவனுடைய திட்டமாகிய அந்த மாதிரிச் சட்டத்தை பின் பற்றும் ஒவ்வொரு சபையும் ஒரே அமைப்பை உடையதாக ஒரு கொள்கையைப் பின்பற்றி ஒரே நாமத்தை தரித்துக்கொண்டு ஒரே ஐக்கியத்தில் இருக்க முடியும். (உ-ம்) எபி. 8:5-ஐப் பார்ப்போம். "இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது. அப்படியே மோசே கூடாரத்தை உண்டுபண்ணப்போகையில் மலையில் உனக்கு காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே, நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்கு கட்டளையிட்டார்". ஆம், ஆசரிப்புக் கூடாரத்தை கட்டும்படி மோசேக்கு தேவன் கட்டளையிட்டபோது அதை கட்டுவதற்கான மாதிரியையும், எல்லாகுறிப்புகளையும் தெளிவாகக் கொடுத்திருந்தார். மோசேயும் தேவன் கட்டளையிட்டபடியே அவர் மாதிரிச்சட்டத்தைப் பின்பற்றி எல்லாவற்றையும் செய்து முடித்தான். இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்ளுகிறோம் என்றால், ஆசரிப்பு கூடாரத்தை தேவன் சில குறிப்பிட்ட மாதிரியில் உண்டாக்க எண்ணினார். ஆகவேதான் அதை கட்டுவதற்கான ஒரு மாதிரிச்சட்டத்தை கொடுத்திருந்தார். அவருடைய திட்டத்தையே மோசே செயல்படுத்த வேண்டிய அவசியத்தில் இருந்தான். அதைப்போல, புதிய ஏற்பாட்டு சபைக்கான ஒரு மாதிரிச் சட்டத்தை கிறிஸ்து கொடுத்திருக்கிறார். இந்த உலகத்தில் இன்று மனிதனால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும், அநேக சபைகளுக்கு மத்தியில் கிறிஸ்து ஸ்தாபித்த உண்மையான சபையை அடையாளம் கண்டு கொள்ள இவை உதவும். புதிய ஏற்பாட்டு சபைக்கான கொள்கைகளை இன்றும் நாம் தெளிவாக அடையாளம் கண்டுகொண்டு, அதைப் பின்பற்றவும், அதேமாதிரியான புதிய ஏற்பாட்டு சபைக்கான கொள்கைகளை இன்றும் நாம் தெளிவாக அடையாளம் கண்டுகொண்டு,

அதைப் பின்பற்றவும், அதே மாதிரியான புதிய ஏற்பாட்டு சபையை உருவாக்கவும் கூடும். உதாரணமாக, பவுல் ரோமாபுரி கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது, "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்." (ரோமர் 6:17,18) இங்கு உபதேசச் சட்டம் என்று ஒருமையிலே கூறுகிறார். அதாவது ஒரே சட்டம். இன்றும் அந்த மாதிரிச் சட்டத்தை அடையாளம் கண்டுகொண்டு, அதைப் பின்பற்ற முடியும்.

"சத்தியத்தையும் அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார் இயசே" (யோவான். 8:32). வேதாகமத்தில் அநேக சத்தியங்களுண்டு. மோசே இஸ்ரவேலர்களோடு சிவந்த சமுத்திரத்தை கடந்து போனார். இதுவும் ஒரு சத்தியம்தான். இயேசு உங்களை விடுதலையாக்கும் என்று கூறிய சத்தியம் இதுவல்ல நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கவல்ல அந்த சத்தியத்தை தெளிவாக அடையாளம் கண்டுகொள்ளலாம். இந்த சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து ஆத்துமாக்களை சுத்தமாக்கிக் கொண்டீர்கள் என்று பேதுரு கூறுகிறார் (1பேது. 1:22) கிறிஸ்தவ மார்க்கம் அடிக்கடி விசுவாச மார்க்கம் என்றழைக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டில் ஒரே விசுவாசம் என்று கூறப்பட்டிருக்கிறது. (எபே. 4:4-5). அந்த விசுவாசத்தை தெளிவாக அடையாளம் கண்டுகொண்டு அதற்கே கீழ்படிய முடியும். "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்றார்" அப்போஸ்தலனாகிய யூதா (யூதா 3). மனிதன் நம்பும் எல்லா காரியங்களும் விசுவாசமாகி விட முடியாது. நான் ஆகாயத்தில் பறப்பேன் என்று நம்புகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். அது விசுவாசம் ஆகாது. நம்பத்துதகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். அதுதான் விசுவாசம். வேதாகமத்தில் கூறப்படும் விசுவாசம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் உருவாகிறது. "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி, தேவனுடைய வசனத்தினாலே வரும் அந்த விசுவாசத்திற்கான மாதிரிச் சட்டம் புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கிறது. அதை அடையாளம் கண்டுகொண்டு, பின்பற்ற முடியும். அந்த விசுவாசத்தினால் தான் ஒருமைப்பாட்டை அடைய முடியும். மனிதன் செயல்படும் எல்லா காரியங்களும் கிறிஸ்தவ மார்க்கம் என்று கூற முடியாது. கிறிஸ்தவ மார்க்கத்தைத் தெளிவாக அடையாளம் கண்டுகொள்ளத்தக்க அம்சங்களை தேவன் வெளிப்படுத்தி இருக்கிறார். அவை புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கின்றன. அதை படித்து, அந்த மாதிரியின்படியே நடந்தால், முதல் நூற்றாண்டிலிருந்த அதே கிறிஸ்தவ மார்க்கத்தை இன்றும் அப்படியே உருவாக்க முடியும். இதுவே முன்னிலை மீட்பின் தத்துவம். நாங்கள் வேண்டுவதெல்லாம், எங்குமுள்ள எல்லா மனிதர்களும், மனித நாமத்தைத் தரித்த சபைகளையும், பாரம்பரியங்களையும், கோட்பாடுகளையும் விட்டு, புதிய ஏற்பாட்டில் நாம் காணும் அந்த கிறிஸ்தவ மார்க்கத்திற்கு, அந்த மாதிரிச் சட்டத்திற்கு, அந்த ஒரே போதனைக்கு, விசுவாசத்திற்குத் திரும்ப வேண்டும் என்பதே.

ஆதி அப்போஸ்தலர்கள் ஒரு மாதிரியை கொடுத்திருக்கிறார்கள். பவுல் கூறுகிறார், "நான் கிறிஸ்துவை பின்பற்றுகிறது போல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (1 கொரி 11.1). நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதற்கான

ஒரு மாதிரியை அப்போஸ்தலர்கள் வைத்துப் போயிருக்கிறார்கள். ஆகவேதான், பவுலும், "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும் பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1 கொரி. 1:10) இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் என்றால் அவருடைய அதிகாரத்தின் மீது என்று அர்த்தம். "ஒரே காரியத்தை" எல்லோரும் பேச வேண்டும் என்கிறார் பவுல். அந்த ஒரே காரியம் தான், ஒருமைப்பாட்டிற்கு அடிப்படை. அதுவே அப்போஸ்தலர்கள் கொடுத்திருக்கும் மாதிரிச் சட்டம். இந்த மாதிரிச் சட்டத்தைத்தான் பவுல் எல்லா சபைகளுக்கும் கொடுத்திருந்தார் (1கொரி. 4:17). இதினிமித்தமாக எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன். நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடத்தைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான் என்றார் பவுல். ஒரு சபையில் எந்த காரியங்களை போதித்தாரோ பவுல் அதே காரியங்களை எல்லா சபையிலும் போதித்திருக்கிறார். ஒரு சபை போதனைகளுக்கும். மற்றொரு சபை போதனைகளுக்கும் எந்தவித வித்தியாசமுமில்லை. இதுவே அப்போஸ்தலர்களின் மாதிரிச் சட்டம். ஆனால் இன்று வித்தியாசப்பட்ட போதனைகளை பிரசங்கித்துக்கொண்டு, வித்தியாசப்பட்ட நாமங்களைத் தரித்துக்கொண்டு, பல நூற்றுக்கணக்கான சபைகள் இயங்கி வருவதைப் பார்க்கிறோம். அப்போஸ்தலர்கள் மூலம் கிறிஸ்து கொடுத்த அந்த தெய்வீகத்திட்டத்தை இப்படிப்பட்ட மனித சபைகள் பின்பற்றுவது கிடையாது. 1 கொரி. 7:17ல் பவுல், "எல்லா சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன். என்றார். ஒவ்வொரு சபைக்கு ஒவ்வொரு திட்டத்தை பவுல் கொடுக்கவில்லை. எல்லா சபைகளுக்கும் ஒரே திட்டம். அதுதான் அப்போஸ்தலர்களின் மாதிரிச்சட்டம். 1 கொரி 14:33-34ல் பவுல், சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக் கடவர்கள். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது என்றார். அப்போஸ்தலர்கள் காலத்தில் எல்லாச் சபைகளிலும் இப்படிப்பட்ட திட்டம் இருந்தது. இன்றும் அதே அப்போஸ்தலர்கள் மாதிரிச் சட்டத்தை கைக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள். 1 கொரி 16:1-2ல் பவுல் காணிக்கை கொடுக்கும் விஷயத்தில் எல்லா சபைகளுக்கும் ஒரு திட்டத்தைப் பண்ணிருந்தார். அவர் கூறியதாவது, "பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்திய நாட்டு சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன் என்றார்". அந்த அப்போஸ்தலர் திட்டத்தை அடையாளம் கண்டு கொண்டு அதை இன்றும் அப்படியே பின்பற்றக்கூடும்.

நீங்கள் கேட்கலாம். அப்போஸ்தலர் திட்டம்தானே! கிறிஸ்து அப்படி கூறவில்லையே என்று. இதற்கும் பவுலே பதில் கூறுகிறார். "ஒருவன் தன்னைத் தீர்க்கதரிசி என்றாவது, ஆவியைப் பெற்றவன் என்றாவது எண்ணினால், நான் உங்களுக்கு எழுதுகிறவைகள் கர்த்தருடைய கற்பனைகளென்று அவன் ஒத்துக்கொள்ளக்கடவன். (1 கொரி. 14-37). ஆம் அப்போஸ்தலர்கள் பரிசுத்த

ஆவியினாலே எல்லா சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தப்பட்டு, கிறிஸ்துவின் வார்த்தைகளையே முதல் நூற்றாண்டில் பேசியும், அவைகளை நிருபங்களில் எழுதியும் வந்தார்கள். (யோவான். 16:13). அப்போஸ்தலர்கள் கொடுத்த திட்டம் உண்மையிலே இயேசு கிறிஸ்துவின் திட்டமே. ஆகவேதான் பவுல், "எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ணவேண்டாமென்று நீங்கள் எங்களாலே போதிக்கப்பட்டிருக்கிறீர்கள்" என்றார் (1 கொரி. 4:6) புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் அந்த மாதிரிச்சட்டத்தை நாம் ஒவ்வொரு வரும் அடையாளம் கண்டுகொண்டு, அதற்கே கீழ்படிய வேண்டியவர்களாக இருக்கிறோம். – நன்றி "சத்தியவழி"

## யோபு — பழைய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் — JOB

***பொருள்*** : துன்பத்தின் முக்கியத்துவம்
***ஆக்கியோன்*** : மோசே என கருதுகின்றனர்
***காலம்*** : 2000-1800 கி.மு.வின் காலகட்டத்தைச்சேர்ந்த பழக்கவழக்கங்களை ஒத்திருக்கின்றன.

### *திட்டவரைக் குறிப்பு :*

★ யோபு நிரூபிக்கிறது: அநீதியான உலகம் நீதிமான்களை துன்பப்படுத்தக் கூடும். - (1-2)
★ மனிதனுடைய பிரதியுத்தரம் திருப்திசெய்கிறதில்ல, எனவே ஒருவன் தேவனை நோக்கிக் கூப்பிட வேண்டும். - (3-211)
★ தேவன் அமைதியாகயிருக்கும் பொழுது, மனுஷர் அவருக்குப் பயந்து காத்திருக்கக் கூடும். - (22-28)
★ நீதிமான் தேவனிடமிருந்து பதிலை எதிர்பார்க்கிறான். - (29 : 31)
★ மனுஷர் தேவனுடைய ஆளுகைக்கும், மனிதபுத்திக்கு எட்டாத அவரது செயலுக்கும் விட்டுவிட வேண்டும். - (32-37)
★ தேவனுடைய அறிவுக்கும் சக்திக்கும் முன், ஒருமனிதன் தன்னுடைய பெருமைக்காகவும், விசுவாசக்குறைச்சலுக்காகவும் மனம் வருந்தக்கூடும். - (38:1-42;6)
★ ஜெபம் ஒப்புரவாதலையும், மன்னிக்கும் தன்மையையும், இழந்தவற்றை திரும்பப்பெற்றுக்கொள்ளுதலையும் கொண்டு வருகிறது. - (42:7-17)

### *சிறப்புச் செய்தி :*

"தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர், நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்....... என் காதினால் உம்மைக் குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது."

### *வரலாற்று பின்னணி :*

ஆசிரியரையும், காலத்தையும் சரியாக கணிக்க முடியவில்லை. தேவனுடைய மக்கள் துன்பத்தை அனுபவித்த காலமாக இருக்கலாம். நீதிமான்களின் துன்பத்தில் தேவன் வெளிப்படுத்தும் அவருடைய தன்மை ஞானம், மற்றும் வல்லமையை அறிதல். – Selected

# வேத அறிவுப் போட்டி எண். 29

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

**கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் விடைகளை உங்கள் சுயமுயற்சியினால் வேதாகமத்திலிருந்து கண்டுபிடித்து வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பி வைக்க வேண்டும். 20 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.**

**Ref.No., உங்கள் பெயர், ஊர் மற்றும் தெளிவான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.**

1. மரணமானது ஆதாம் முதல் மோசேவரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய் எவர்களையும் ஆண்டு கொண்டது?
2. கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் எத்தனைதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது?
3. சமுத்திரையான நிறைகோலும் தராசும் யாருடையது?
4. அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், எவ்விதமான காரியங்களைப் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுது போக்குகிறதில்லை?
5. அசட்டை பண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின யாரையே அசட்டைபண்ணுகிறான்?
6. யாருடைய ஊழியக்காரன் நான் வந்த காரியத்தைச் சொல்லுமுன்னே புசிக்கமாட்டேன் என்றான்?
7. எந்த புருஷனும் தன் வீட்டுக்குத்தானே அதிகாரியாயிருக்க வேண்டும் என்ற கட்டளையை எந்த ராஜா, சகல நாடுகளுக்கும் எழுதி அனுப்பினான்?
8. விபசாரனுடைய கண் எவ்வேளைக்குக் காத்திருந்து; என்னை ஒரு கண்ணும் காணமாட்டாதென்று முகத்தை மூடிக்கொள்ளுகிறான்?
9. இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் எது பெரியது?
10. எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால் எவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும்?

## நடப்புச் செய்திகள்

★ *தேசிய நதிகளை இணைக்கும் திட்டம் திட்டமிட்டபடி நிறைவேற்றப்படும். இதில் பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் வாஜ்பேயி அறிவித்துள்ளார்.*

★ *இதுவரை 111 உலகநாடுகள் மரணதண்டனையை சட்டப்பூர்வமாக ரத்து செய்துள்ளன.*

★ *சிகரெட் புகைப்பதால் சீனாவில் ஆண்டுக்கு ஒரு கோடிபேர் சாவு.*

★ *ரயிலில் பயணம் செய்பவர்கள் வசதிக்காக இண்டர்நெட் வசதிகளை உருவாக்கும் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளன. அடுத்த ஆண்டில் இது ஐரோப்பாவில் சாத்தியமாகும். நாளடைவில் இந்தியாவிலும் இது சாத்தியமாகலாம்.*

★ *உலக ஜூனியர் ஆண்கள் ஸ்குவாஷ் அணிகள் சாம்பியன்ஷிப்பட்டத்தை பாகிஸ்தான் வென்றது.*


Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629

Postal Registration No. TN/SR-164/2002. Licensed to post without prepayment License No. TN/WPP-25/SR/2002. Posted at Batlagundu Post Office on 10th January 2003.

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali Street, Madurai-625 001. Editor : B. Arjunan.

எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday Thursday | 6.45 a.m 7.00 a.m | Box. 3815 New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun.Mon Wed.Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80 Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| TAMIL | Mon, Tue, Wed, Thu, Fri | 5.30 p.m 5.45 p.m | Box. 8405 Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine** **FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.

E-mail : batlagunduchurchofchrist@rediffmail.com